# குருதேவர்

## இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கை-51

''ஓதுதலும் ஓதுவித்தலும்''
(தொழுகைமுறை)





பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி
குருமகா சன்னிதானம்
**ஞானகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்**

Ph: 619994

காணிக்கை : ரூ 1-25

# தொழுகை முறை விளக்கம்

i) தொழுகை முறைமூலம் 1) மண்ணவர் 2) விண்ணவர் 2) வானவர் 4) ஆகாயத் தவர் 5) பிண்டத்தவர் 6) அண்டத்தவர் 7) பேரண்டத்தவர் 8) அண்ட பேரண்டத்தவர் எனப்படும் எட்டு நாட்டவரும் பூசைக்கு அழைக்கப்படுவர்.

ii) பதினெண் சித்தர் மரபுப்படி, பதினெண்சித்தர்களும், இவர்களின் கருவழிவாரிசுகளும் குருவழி வாரிசுகளும், விந்துவழி வாரிசுகளும், நாற்பத்தெட்டு வகைச் சித்தர்களும்.... இருக்கு மிடத்துக்கு அனைவரையும் அழைத்து உருக்கமுடன் பூசைசெய்திடுவார்கள், அதாவது குருபாரம் பரியத்தில் "எங்கும் நீக்கமற நிறைந்துள்ள பரம் பொருளின் அணுத்திரள் கூட்டத்தின் ஈட்டத் தால் உருவான அருவங்கள், உருவங்கள், அருவுருவங்கள் நிலைத்தும், அலைபோல் அலைந்தும் அருளுலக இயக்கங்களை நிகழ்த்துகின்றன. இந்த இயக்கங்களின் ஆட்சி நாயகங்களான தாத் தாக்கள், ஆத்தாக்கள், அம்மையப்பன்கள்.... அழைத்துப் பூசை செய்யப்படும் மறைகளும், நாதங்களும், போதங்களும், ஓதங்களும்.... எண்ணற்று வழங்கப்பட்டுள்ள மதமேசித்தர்நெறியான 'சிவநெறி' எனப்படும் இந்துமதம்.... என்ற வாசகங்கள் மேற்படிக் கருத்தை விளக்குகின்றன.

(iii) '*தனிமனிதத் தொழுகை முறை* ; தன்குடும்பத்தார், உறவினர் (குருதித் தொடர் புடையசொந்தக்காரர்)முதலியவருடன் நிகழ்த்தும் *ஒரு'குருதியார் தொழுகை முறை*' உற்ரூர் ஊரார்; நண்பர்., தோழர்; அன்னியர்.... முதலானவர்களுடன் கூடி நிகழ்த்தும் '*பொதுத்-தொழுகை முறை*' என்று மூன்று வகையான தொழுகை முறைகள் உள்ளன.

(iv) தொழுகை முறையைப் பின்பற்றுபவர்கள் ஒருநாளைக்கு ஒருமுறை தொழுவது என்ற நியதி முதல் ஒரேநாளில் ஆறுமுறை தொழுவது என்ற நியதி வரை பின்பற்றலாம். இது அவரவரின் விருப்பாற்றலுக்கும், வசதி வாய்ப்புக்களுக்கும், பத்திப் பக்குவமுறைக்கும் ஏற்ப வேறுபட்டிடும்; மேலும் a) நால்வகை ஆச்சாரியப் பீடாதிபதிகளும், b) எண்வகை ஆச்சாரியார்களும் c) பதின் மூன்று வகைக் கருவழி ஆச்சாரியார்களும் d) பதின் மூன்று வகைக் குருவழி ஆச்சாரியார்களும் e) நாற்பத்தெட்டுப் பதினெண் சித்தர் பீடாதிபதி வழி ஆச்சாரியார்களும் ஆக மொத்தம் ஐந்து வகை ஆச்சாரியார்களும் அருளுலக ஆட்சியின் பெருங் குழுவினர் என்று சிறப்பிக்கப்படுகின்றனர். இவர்களின் நேரடி வழிகாட்டலால் எவரெவர் எத்தனை முறை தொழுகை செய்ய வேண்டுமென்பது நிர்ணயிக்கப்படவேண்டும் என்பதுதான் '*தொழுகை முறையின் செயல்நிலை விளக்கம்*.

(v) a) '*தனிமனிதத் தொழுகைமுறைதான்* '*ஓங்குமுறைத் தொழுகைமுறை* என்றும் b) '*ஒரு குருதியார் தொழுகைமுறைதான் தாங்குமுறை அல்லது நாங்குமுறைத் தொழுகை முறை* என்றும் c) '*பொதுத் தொழுகைமுறை' தான்' பாங்குமுறை அல்லது வாங்கு முறைத்தொழுகைமுறை* என்றும் மூன்றுவகைத் தொழுகை முறைகள் தெளிவாக வகுக்கப் பட்டிருப்பதுதான் பதினெண் சித்தர்களின் மெய்யான இந்துமதம். ' இந்தத் தொழுகை முறையைப் புரிந்துவிரும்பி ஏற்றுக் கொள்ள முடியாமலிருப்பதுதான் பிறமண்ணினரான பிருமணரின் வட ஆரியவேதமதக் கலப்பால் பிறந்த பொய்யான ஹிந்துமதம்.

குறிப்பு :- தொழுகைமுறைப் பூசாமொழி வாசகங்களை வட ஆரிய வேதமத மொழியான சமசுக்கிருத மொழியில் ஓத முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதனல் தான் அது வட ஆரியரால் அழித்தொழிக்கப்பட்டது.

*வழங்குபவர் :* காக்கா வழியன் பண்ணையாடி சித்தர் காகபுசுண்டர் எனும் காக்கையர்

ம. பழனிச்சாமி பிள்ளை
இமஇயின் 2வது பாரம் பரியத் தலைவர்

# நாடும் ஏடும் கேடு நீங்க

## இந்து மறுமலர்ச்சி இயக்கம்-கொள்கை விளக்கம்

அருளுபவர் : நான்கு யுக நாயகம் தத்துவநாயகம் அருளாட்சி நாயகம்
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.

தமிழர்கள் கலையுணர்வும் ஆர்வமும் நாட்டமும் பயிற்சியும், முயற்சியும், தேர்ச்சியும் உடையவர்கள் என்பதால்தான் மூன்று பெரும் ஊழியின் அழிவுகளிலிருந்தும தங்களின் பழம் பெரும் சங்க இலக்கியங்களில் சில துளிகளையாவது அமிழ்தம் போல் காத்துள்ளனர்.

சங்க இலக்கியங்களைத் தொகுத்துக் காக்க முற்படாமல் பல்லாயிரமாண்டு இடைவெளியில் எழுத்து, சொல், பொருள் எனும் முக்கோண அரணுக்குள்தான் ''மொழி'' உள்ளது என்ற பேருண்மையின் விளக்கமாகத் 'தொல்காப்பியம்' எனும் இலக்கண நூலைக் காத்திட்டனர். இந்த இலக்கண நூலின் நடை, நயம், கருத்து, வளம் மேற்கோள், குறிக்கோள் முதலியவை இதற்குமுன் பலநூறு இலக்கண நூல்கள் இருந்திட்டன என்ற பேருண்மையைச் சான்று களோடும், ஊன்றுகளோடும் மெய்ப்பிக்கின்றன. இப்பேருண்மை யால், பல நூருயிரக் கணக்கான இலக்கியங்களின் சாரமே இந்த நூற்றுக்கணக்கான இலக்கண நூல்கள் என்ற அரிய உண்மை நிறுவப்பட்டுப் பழம்பெரும் பைந்தமிழ் நூல்கள் பல்லாயிரக்கணக்கில் பிறந்தும் பாதுகாப்பின்றி மறைந்தன என்ற உண்மை நிலைநாட்டப்படுகிறது.

இதேபோல், தமிழர்கள் சமயத் துறையில் ஆர்வமும், அக்கறையும், பொறுப்பும் காட்டாததால் எண்ணற்ற கோடிச் சித்தர்களின் நூல்கள் உணரப்பட்டும் காணப்படாத நிலையை அடைந்தன. உயிரினங்களை வழிபடும் ''சொரா சிட்டர் மதம்'' (The Zoroastarism); மானுட நலஉரிமை பேணும் கன்பியூசிய மதம் (The Confucianism); உயிர்களிடம் அன்பு, கொலை செய்யாமை, வாய்மை பேணல், கூறும் புத்தர் புத்தர் மதம் (The Bhudhism); நல்லெண்ணம் தன்னம்பிக்கை, துணிவுச்செயல் கூறும் சமணர் மதம் (The Jainism); தன்னைபோல் பிறரை, நோக்கும் பொதுவுடமை கூறும் 'கிறித்துவ மதம்' (The Christianity); தோழமையும், தொழுகையும், தெய்வம் அஞ்சுதலும், தளர்விலா முயற்சியும் கூறும் 'இசுலாமிய மதம்' (The Islam); முதலிய அனைத்துமே சித்தர்களின் உலகந்தழுவிய சமத்துவசகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் அமைக்கும் சித்தாந்தத்திலிருந்தே பிறந்தன என்ற பேருண்மையை விளக்குவனவாக உலகிலுள்ள கோயில்கள் (Temples), கோயில் விஞ்ஞானங்கள் (Temple Sciences) சாத்திறச் சம்பிறதாயச் சடங்கு முறைகள் (The Religious Customs and Manners); சமயக் கொள்கைகள், கோட்பாடுகள், ஒழுகலாறுகள், நெறிகள் போக்குகள், சட்டங்கள், கட்டுப்பாடுகள், மரபுகள் (The Religious beliefs. faiths, rules, regulations, laws and traditions); சமய வழிபாடுகள், விழாக்கள் (Offerings, rituals, festivals); பழைய புராண இதிகாசங்கள் (The Holy Versions, Commandments, Vedas and Sacred Sayings) உள்ளன

சித்தர்கள் தமிழினத்தின் வாழ்க்கை. வரலாறு, கலை, நாகரீகம், பண்பாடு, அறி வியல் சமூகவியல், அரசியல், பொருளியல், முதலியவைகளின் அடிப்படையில் உலக அருளியலை (The Universal Mysticism and Divinology) விளக்கியுள்ளார்கள் என்ற பேருண்மையே இப்போதைக்கு வலியுறுத்திப் பொலிவுபெற விளக்கிட வேண்டிய அவசரமும்

அவசியமும் ஏற்பட்டுள்ளது. அதாவது சித்தர்கள் தமிழர்களைப் பற்றி மட்டும் கவலைப்படவில்லை; உலகம் முழுவதும் தோன்றிய எல்லா மானுட இனங்களைப் பற்றியும் கவலைப்பட்டார்கள். அந்தக் கவலையால் உருவான நற்பயனே உலக மதங்கள்.

சித்தர் நெறி 'மானுட நலம்பேணும்' (The Humanism or The Human Welfare Association) இயக்கத் தத்துவமே, இது ஓர் ஒப்பற்ற சமூகவியல் விஞ்ஞானம் (The Siddharism is the best social science which served for the uplift of mankind in all sense) சித்தர்களின் படைப்புகள் மனித அறிவு வளர்ச்சிக்கும், அறவாழ்வுக்கும், அமைதி பண்புக்கும், உரிமைமிகு உறவுகளுக்கும் வழியாக, வழித்துணையாக, வழிப்பயனாக உள்ளவையே. ''மனித இனத்தை விலங்கு நிலையிலிருந்து சமுதாயமாகக் கூடி வாழச் செய்தவை சித்தர்களின் அருள் நெறியே'' (The divine principles and policies of the Siddhars tamed and uplifted men to possess culture.) அதாவது மனிதன் நீதிக்கருத்துக்களாலும், உணர்வுகளாலும் தான் (Moral Thoughts andThinkings) திருந்திய வாழ்வைப்பெற முடியும் என்பதே சித்தர் நெறி. தமிழிலக்கிய இலக்கணங்கள் உணர்த்தும் சட்டம். ஒழுங்கு, கட்டுப்பாடு, கோட்பாடு, நெறிமுறை, ஒழுகலாறு, மரபு, பழக்க வழக்கம், நம்பிக்கை, நல்லெண்ணம், நீதி, நிர்வாகம்....முதலியவை அனைத்தும் 'சமயம்', (மதம்) எனும் அருள் நெறியையே அடிப்படையாக உள்ளீடாக, உயிர்நாடியாக, கொள்கைப் பிடிப்பாகக் கொண்டுள்ளன என்பதை உணரலாம். இது சித்தர்களின் சாதனையே. அவர்களின் கொள்கையை விளக்கிட :

''மனிதன் பிறப்பிறப்பற்ற கடவுள் நிலையையுடைய மற்ற மனிதனை மதித்தல், பேணுதல், பணிதல், போற்றுதல் வேண்டும்.''

''இயற்கை நெறியான இல்லறத்தில் நின்று கனிவு, இனிமை, அன்பு, பிறர்க்குதவுதல், தோழமை காத்தல், வாய்மை பேணல், உலகத்தோடு ஒட்ட ஒழுகல் முதலியன செய்தலே நிறைவான நிலையான இறைமை பெறும் வழி.''

''துணிவும், பணிவும், கொடையும், அடைக்கலமும், கனிவுமிகு இனிமையும், உண்மையும் புகழுடம்பு நல்கும்.

''துறவு ஞானம் (Denial of family Life) வீடு பேற்றை நல்க முடியாது. இல்லற வாழ்வே நல்ல கல்வி, கேள்வி, தளரா வேள்வி, வாய்மை, தூய்மை முதலியவற்றால் வீடு பேற்றை விளைவித்துத் தரும்''.

''வேதாகம உபநிடத வாதைகளும், போதைகளும் கடந்து இல்லறம், அடக்கம், அறிவு. அன்பு. நட்பு, புறங்கூறாமை, நன்றி எனும் பண்பு நலன்கள் உயிர், ஆவி, ஆன்மா மூன்றும் முக்கோணச் சத்தி பீடம் அமைத்துச் சித்திகளையும், முத்திகளையும் பெறுவதே இம் மணீதர்களுக்கு [மண்ணீசர்களுக்கு-பாட வேறுபாடு உள்ளது, மணிசர்->மணிதர்] உரியவழி.''

'அறவழிநில்' 'மறத்தோடு செயல்படு' 'நூலறிவே நுட்பம்' 'பட்ட அறிவே நுட்பம்' 'குரு வழியே திருவடையும் கருவழி' 'கனிவாகப் பழகு' 'இனிமையாகப் பேசு' உண்மை அன்புடன் உறவு கொள்' 'தூய்மை பேண்' 'வாய்மை காத்திடு' 'பிறர்க்' 'உதவிடு' 'ஆற்றுமக்கள் போற்றிடு' 'வேற்றுமை களைந்திடு' 'நற்றவம் ஆற்றிடு' 'பெற்றதை வளர்த்திடு' 'கற்றதைப் பயின்றிடு' 'உற்றதை விளம்பிடு' 'மறுத்ததை வெறுத்திடு' 'வந்ததை வாழ்த்திடு' 'வணங்குவதைவணங்கு' 'இணங்குவதோடு இணைந்திடு' 'இணையற்றதைத் துணையாக்கிடு''நன்றி பேணிடு', ,அழகு போற்றிடு' ,அன்பு ஏற்றிடு', 'அடக்கம் காத்திடு', ஞானம் பயிராக்கிடு', 'மெய் ஓம்பிடு' 'அனைத்தையும் சமமாக்க் கருது' 'துணிவோடு செயல்படு' களிப்போடு பணிபுரி', 'காடு நாடாகப் பாடுபடு',

'சுவைகளை விரும்பித் துய்த்திடு', 'துன்பத்துள்ளும் இன்பமிருப்பதை உணர்ந்திடு', அலை நிலைகளைக் கலையால் நிலைநிறுத்து', அருளால் அனைத்து இருளையும் அகற்று', 'தவத்தால் அவலங்களை அழித்திடு', 'உன்னை அழகு படுத்தலே உலகை அழகுபடுத்தலாம்', 'உன்னை அமைதிப்படுத்தலே உலகை அமைதிப்படுத்தலாம்', 'உன்னை நிறைவு படுத்தலே உலகை மகிழ்வுறுத்தலாம்', ,உன்னைச் செம்மைப் படுத்தலே உலகைச்செம்மைப் படுத்தலாம்', 'உன்னை செழிப்பாக்கலே உலகைச் செழிப்பாக்குதலாம்' உன்னை நம்பி வாழுதலே உலகை நம்பி வாழுதலாம்', 'உன்னை விழிப்பாக வைத்திருத்தலே உலகை விழிப்பாக வைத்திருத்தலாம்'

1 ''தன்னையறியும் அறிவே மெய்யறிவு
பின்னையறிவு பேயறிவு''

2 ''முன்னையறிந்தால் பின்னை யறியலாம்
பின்னையறிந்தால் தன்னை யறியலாம்''

3 ''தலைவனை யறியத் தன்னை யறிந்திடு
தன்னை யறியத் தலைவனை யறிந்திடு''

4 ''உன்னைக் கொண்டு மண்ணை விண்ணை விளங்கிடு''

....என்பன போன்ற கருத்துச் சொற்றொடர்கள் 'குருவாசகம்', 'குருவாக்கு', 'கரு வாசகம்' 'கருவாக்கு', 'திருவாசகம்', 'திருவாக்கு','குருபாரம்பரியம்'.... [முதலிய நூல்களின் அருமைப் பாட்டையும் பெருமையையும், பயனையும் விளக்கும் வண்ணம் இப்பதிப்புரையில் எடுத்துக் காட்டப்படுகின்றன] எனும் நூல்களிலிருந்து ஈண்டு எடுத்துக் காட்டப்படுகின்றன. ஏனெனில் சித்தர்கள் மிகச் சிறந்த 'ஞானிகள்', 'மகான்கள்' 'தவசிகள்' 'அருளாளர்கள்' 'தத்துவவாதிகள்'.... என்ற கருத்தோட்டமே அனைவரிடமும் உள்ளது. **சித்தர்கள் மிகச் சிறந்த மொழிப் புலமையாளர்கள், இலக்கியவாதிகள், சிந்தனையாளர்கள், சீர்திருத்தவாதிகள், பகுத் தறிவுவாதிகள், விஞ்ஞானிகள், அரசியல்மேதைகள், சமுதாயச் சிற்பிகள், பேரறிஞர்கள், உலகியலுணர்ந்த மெய்ஞ்ஞானிகள் என்ற கருத்தோட்டம் எல்லா மட்டத்தாருக்கும் உருவாக வேண்டும்.** அப்பொழுதுதான் சித்தர்நெறி வளர்ச்சியுற்று **'இந்து மறுமலர்ச்சி இயக்கம்' வெற்றி பெற்றிடும்.**

சித்தர்களின் நூல்கள் **தமிழர்கள் வரலாறு எழுதி வைக்கவில்லை** என்ற **மாபெரும் குறையை முழுமையாக அகற்றி நிறைவு செய்யும் பேராற்றலுடையவை என்பதை இப்பதிப்புரையில் வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன். ஏனெனில் 'தமிழ் வாழ்க !' 'தமிழினம் வெல்க !, தமிழ்நாடு உயர்க! என்ற முழக்கமும் உணர்வும் அரசியல்வாதிகளால் குளிர் காய்வ தற்குப் பயன்படுத்தப்பட்டு எரிந்து சாம்பலாகிவிட்டன. அவை தழைக்க உழைக்க சித்தர்களின் சாதனைப் பட்டியலே சிறந்த வழி.**

**சித்தர்கள் காலம் இம்மண்ணுலகுக்கும் முந்திய ஒன்றாகும். அதாவது, விண்வெளியில்** உள்ள சூரியனின் சிதைவு நெருப்புக் கோளமாகச் சுழன்று, பனிக் கட்டியாக, நீராக மாறி பின் நிலங்கள் தோன்றிப் பயிரினங்களும், உயிரினங்களும் பிறந்தன.... என்ற இம்மண்ணுலக **வாழ்க்கை** வரலாற்றையே (The Life history of the Earth) எழுதும் மூத்தவர்கள்தான் பதி **னெண் சித்தர்கள்.** இவர்கள், விண்வெளியில் உள்ள பல அண்டங்களிலும் வாழ்ப **வர்கள். இவர்கள்** சிறந்த விண்வெளி ஆய்வுப் பயண வீரர்கள் (Astronauts) எனவே, இவர் களையும், இவர்களின் அறிவியல் சாதனைகளையும், அருளுலகக் கொடைகளையும் விவரித்தல் எளிதல்ல; காலமும் கருத்தும் அறிவும்.... மிகக் குறைவாகவே இருப்பதால்; சித்தர்களின் கடந்த மூன்று நூற்றாண்டுச் சிந்தனைகளை (The Last three centuries' thoughts of the Siddhars) மட்டும் விவரிப்பதே நல்லது.

இந்து மறுமலர்ச்சி இயக்கம்' என்ற ஒன்றைக் கி. பி. 1772இல் உருவாக்கிய எனது தாய்வழித்'தாத்தா 'சித்தர் ஏளனம் பட்டியார்' அவர்களையே ஆரம்பமாகக் கொண்டு 18, 19, 20ஆம் நூற்றாண்டுகளில் சித்தர்கள் வளர்த்த சிந்தனைகளை ஆராயலாம், ''இந்தியாவுக்கு வந்திருக்கும் கிறித்துவம், முகம்மதியம் எனும் இருபெரும் சமயங்களும் 'சித்தர் நெறி' (இந்து மதம்) எனும் மழையால் பிறந்த ஆறுகளே! இவை, சித்தர் நெறி வாழும் இந்திய மக்களுக்குப் புதியவையல்ல மாறானவையல்ல, வேறானவையல்ல. இப் பேருண்மையினைப் புரிந்தும் பிரு மணர்கள் இவற்றோடு சண்டை, சச்சரவு, போட்டி, போர்....முதலியவைகளை வளர்த்தே வரு கின்றனர், இதனால் இவர்கள் தங்களுக்கென ஓர் உயர்ந்த தலைமைப் பீடத்தைக் கருவாக்கிக் காத்து வளர்க்கிறார்கள். இது தவறு கண்டிக்கத் தக்கது, பிருமணர்கள் திருந்த வேண்டும். அப் பொழுதுதான் கிறித்துவமும், முகமதியமும் இந்தியம் எனப்படும். 'சித்தர் நெறி' (இன்றைய இந்துமதம்) இரண்டறக் கலந்துவிடும். இதற்காகத்தான் 'இந்து மறுமலர்ச்சி இயக்கம்' தோற்று விக்கப்படுகிறது. இது பிருமணரை எதிர்க்கவோ அழிக்கவோ ஏற்படுத்தப்படவில்லை. சித்தர் கள் இம்மண்ணுலக இனத்தார் அனைவரையும் சமமாகக் கருதும் சமத்துவச் சகோதரத் தத்து வப் பொதுவுடைமைக் கூட்டுறவுச் சமுதாயம் அமைத்தவர்களே

பிருமணர்கள், வித்தை காட்டுபவர்கள் யானை, புலி, கரடி, சிங்கம்.... முதலியவை களை முக்கால் பட்டினி போட்டு வலிமை குன்றச் செய்து தங்களுக்கு அடிமையாக்கி ஏவல் செய் விப்பது போல், இந்துமதத்தை பல சாதிப் பிரிவுகளால், ஏற்றத் தாழ்வுகளால், வேறுபாடுகளால் முரண்பாடுகளால், தீண்டாமைகளால் சித்திரவதை செய்து பட்டினி போட்டு அடக்கி ஒடுக்கித் தங்கள் விருப்பப்படி வித்தை செய்யும் ஒன்றாக ஆக்கி வருகிறார்கள். அதாவது, சித்தர்களின் தத்துவச் செழிப்பும், செய்முறை வளமும், சாத்திற வலிமையும் முழுமையாக மூடி மறைக்கப் பட்டு ஆரியக் கற்பனைகளும் கதைகளும், சடங்குகளும்' சட்டங்களும், வேதங்களும் இந்து மதத்தைச் செழிப்பற்றதாக, வளமற்றதாக, வலிமையற்றதாக, மெலிவுற்றதாக, நலிவுற்றதாக கேலிக்குரியதாக ஆக்கி வைத்திருக்கின்றன. அதனால்' இந்துமதம் தாய்ப்பாலில்லாத நோஞ் சான் குழந்தையாக' பிறர் உதவியின்றி நடக்க முடியாத 'இளம்பிள்ளைவாத நோயால் பாதிக் கப்பட்ட குழந்தையாக இருக்கின்றது. எனவே, பிச்சைக்காரர்கள் பிச்சையெடுக்க நோயாளிக் குழந்தைகளைப் பயன் படுத்துவது போல் பிருமணர்கள் சித்தர் நெறி எனும் நல்ல திடமான குழந்தையை நோயாளியாக்கித் தாங்கள் வாழ்வதற்கும், மேலாண்மை செய்வதற்கும் பயன் படுத்தி வருகிறார்கள். இவர்கள் திருந்தவேண்டும். ஆனால்இவர்களைத் திருத்தமுடியாது ஏனெனில் இவர்கள் மிக மிகக் கட்டுப்பாடும், முன்னெச்சரிக்கையும், விழிப்பும், நாட்டு நடப் பில் ஆதிக்கமும், அப்பாவி மதவாதிகளிடம் மிகுந்த செல்வாக்கும், உடலுழைப்பின்றி அறி வுழைப்பை மட்டுமே நம்பி வாழும் வாழ்வும் உடையவர்களாக இருக்கிறார்கள். அதனால், இவர்கள் தங்களுடைய வாழ்வுக் கருவியாக இருக்கும் மடமை மிகுந்த இந்துமதப் பகுதிகளை யார் சீர்திருத்த முற்பட்டாலும், அவர்களை 'மதவிரோதிகள்' 'நாத்திகர்கள்' 'சமுதாயத் துரோகிகள்' என்று எளிதில் பழிசுமத்தி அழித்தொழித்து விடுகிறார்கள், இதற்காகவே '**இந்து மதம்**' என்ற சொல்லைப் பயன்படுத்தாமல் 'இந்து மறுமலர்ச்சி இயக்கம்' பல நூற் றாண்டுக் காலம் வாழ்ந்தால்தான் இந்திய மக்களைத் தங்களுடைய நல்வாழ்வுக்குரிய ஒன்றாக இந்து மதத்தைப் பயன்படுத்திக் கொள்ளும்படிச் செய்ய முடியும். அதற்காகத்தான் இந்த இயக்கத்துக்கு குருதி வண்ணச் சிவப்புத் துணியில் கருப்பு வண்ண இலிங்கம், மூன்று திருநீற்று பட்டையும் ஒரு குங்குமப் பொட்டும் அணிந்த நிலையையுடைய 'ஞானக்கொடி' வழங்கப்பட் டிருக்கிறது. இக்கொடியின்கீழ் அருளாளர்கள் ஒன்று திரண்டு பயிற்சி பெற்றுப் பின் திட்ட மிட்டுச் செயலில் இறங்க வேண்டும். இல்லாவிட்டால், கடந்த இரண்டாயிரம் மூவாயிரம் ஆண்டுகளில் இந்து மதத்தை மக்களின் அமைதியை, ஒற்றுமையை, சமத்துவத்தை, சகோதரத் துவத்தை, சமாதானப் பண்பை, உறவு முறையைப் பாழ்படுத்திக் கீழ்மைப் படுத்திடப் பயன்படுத்திய பிருமணர்கள் இந்த இயக்கத்தையும் அழித்திடுவர்.

'பிறமண்ணினர்' என்ற சொல்லால் குறிக்கப்படும் அன்னியர்களே 'பிருமணர்கள்'. இவர்கள் இந்திய மக்கள் பலசாதிகளாகப் பிரிந்து ஒருவருக்கொருவர் ஏற்றத்தாழ்வும் வேறுபாடும் போட்டியும் பொருமையும் தீண்டாமைக் கொடுமையும் வளர்த்துக் கொண்டு ஒற்றுமையின்றிச் சண்டை போட்டுக் கொண்டே இருந்தால்தான் தாங்கள் வாழமுடியும் என்பதை உணர்ந்தவர்கள். எனவே, இவர்களைத் திருத்த முற்படுவதை விடச் சாதிப் பிரிவுகளை அழித்தொழித்து அனைவரையும் சமம் என்றாக்கிடலே செய்ய வேண்டிய செயல். திருமண உறவு எல்லாச் சாதிகளுக்குள்ளும் கலந்து எதார்த்தமாக நடக்கும்படி செய்திட்டால் போதும். எல்லாச் சாதி வேறுபாடுகளும் ஏற்றத் தாழ்வுகளும் தீண்டாமைகளும் இல்லாமல் செய்திட்டால் போதும். அதுவே, இந்து மதத்தை மறுமலர்ச்சியும் வளர்ச்சியும் பயனும் பெறுமாறு செய்திடும். ஏனெனில், சரியாகவோ தவருகவோ பிருமணர்கள் இந்துமதத்தில் ஆதிக்கம் செலுத்துகிருர்கள். அவர்கள் பிறர் அறியாத சமசுக்கிருத மொழியில் வேதம், சாத்திரம், ஆகமம், உபநிடதம், அர்ச்சனை மந்திரம்.... முதலியவைகளை வைத்துக்கொண்டு யாரும் எந்த புதுக்கருத்தும், திருத்தமும் இந்து மதத்தில் செய்து விடாதபடி தடுக்கிருர்கள். எனவே, இவர்களைச் சீர்த்திருத்துவது இயலாது, முடியாது, வீண் முயற்சி. இவர்களை எதிர்க்காமல் இந்து மதச் சீர்திருத்தம் செய்ய வேண்டும். அதற்காக அறுபத்து நான்கு ஆயகலைகள், நாற்பத்தெட்டு அருட்கலைகள், ஒன்பது கடவுட் கலைகள், ஒன்பது தெய்வீகக் கலைகள் ஒன்பது பேய்க்கலைகள், ஒன்பது நோய்க்கலைகள், ஒன்பது தேய்கலைகள், சாத்திற தோத்திறங்கள், நிடதங்கள் இணை நிடதங்கள், துணை நிடதங்கள், ஆகமங்கள், மீமாம்சைகள் நான்மறைகள், நான்முறைகள், நான்வேதங்கள், நானெறிகள், நாதங்கள், ஒதங்கள், ஓகங்கள் ஓமங்கள். யாகங்கள், யக்ஞங்கள், வேள்விகள், தவங்கள், ஞானங்கள், பூசைகள், வாக்குகள் வாசகங்கள், சூத்திறங்கள், சூத்திரங்கள், சூத்தரங்கள்....முதலிய சித்தர் நெறிக்கலைகளைப் பயன்படுத்தி எல்லாச் சாதிகளிலும் அருளாளர்களை உருவாக்கிடல் வேண்டும்.

அந்த அருளாளர்கள் ஆங்காங்கே செயல்பட்டு நோய்களையும், பேய்களையும் கோள்களையும், நாள்களையும், மீன்களையும், இராசிகளையும்.... வென்று மக்களுக்கு நற்பணி செய்திட்டால் போதும். அவற்ருல், மக்கள் சித்தர் நெறிகாட்டும் அருள்வழியை, அன்பு வழியை, சமத்துவ வழியை, சகோதரத்தத்துவ வழியை, சமாதான வழியை, அறவழியை.... உணர்ந்து புரிந்து ஏற்றிடுவர். அதன் பிறகு பிருமணர்கள் இந்துமதத்தைப் புனிதப் படுத்த இனிமைப்படுத்த....உதவுவார்கள். எனவே, **இந்து மறுமலர்ச்சி இயக்கம் எக்காரணத்தை முன்னிட்டும் பிருமண மறுப்புடனே வெறுப்புடனே, எதிர்ப்புடனே செயல்பட்டுவிடக் கூடாது.**

பிருமணர்கள் பல காலகட்டங்களில், 'வெட்டப்போகும் பலியாட்டை நன்கு பசிய தழைகள் போட்டு ஊட்டி வளர்ப்பது போல்' இந்துமதத்தை வாஞ்சையோடு வளர்த்து வந்திருக்கிருர்கள் என்பதை யெண்ணியாவது பிருமண எதிர்ப்புணர்வை வித்திட்டு வளர்க்காமல் இருக்க வேண்டும். இதை உணராமல் இந்துமதச் சீர்திருத்தத்தில் இறங்குபவர்கள் ஆற்றின் போக்கை எதிர்த்து நீந்த முற்பட்டுக் காலத்தையும், முயற்சியையும் வீணாக்கியவர்களாகவே ஆகிவிடுவார்கள். எனவே, சில நூற்ருண்டுகள் இலைமறை காயாகவே இந்து மறுமலர்ச்சி இயக்கம் வளர்ச்சி பெறுவதுதான் நல்லது. ....(தொடரும்)

---

## அறிவிப்பு

பதினெண் சித்தர் மடம், பதினெண் சித்தர் நெறிப்பள்ளியின் மூன்ருவது பயிற்சி முகாம் வரும் **செப்டம்பர் மாதம் (1988) 23, 24, 25 தேதிகளில்** திருச்சி, திருவரங்கத்தில் நடைபெறும். இதில் கலந்து கொள்ளும் அடியான்கள் அடியார்கள் விரைவில் தலைமைப் பீடத்துடன் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம், -; தலைமைப்பீடம்

---

# சித்தர் இராமாயணம்

1) வீடணனும் (இராமாயணத்தில்), கண்ணனும் (பாரதத்தில்) ஒரே மாதிரியான பாத்திரப் படைப்பு பெற்றவர்கள். வீடணன் 'அண்ணன் இராவணனை எதிர்த்துப் போர் தொடுப்பதில்லை', என்று முடிவெடுத்துச் செயல்படுகின்றான். எனவே, கடைசிவரை உத்திகளை மட்டுமே கூறுகின்றான்.

2) கடைசி நாளில் இராமனிடம் இரண்டு அம்புகளை எடுக்கச் சொல்கின்றான் வீடணன். ஒன்று பிறைபோன்ற அம்பு, மற்றொன்று கூரிய அம்பு, கூரிய அம்பைப் பார்த்த உடனே இராவணன் அண்ணாந்து நோக்க, அது இராவணனின் அமுத கலசத்தை உடைக்கின்றது. அதே நேரத்தில் பிறை வடிவ அம்பு அவனது கழுத்தை வெட்டுகின்றது.

3) பொதுவாகச் சித்தர் இராமாயணம் பதினெண் சித்தர் பீடாதிபதிகளால் குறிக்கப்படவில்லை. அவ்வளவு முக்கியத்துவம் இராமாயணத்திற்கோ பாரதத்திற்கோ தரப்படவில்லை. பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி கூடத் தனது குருபாரம்பரியத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாகத்தான் குறிக்கின்றார். சித்தர் ஏனைப்பட்டியார்தான் மிகவும் சிரமப்பட்டுத் தேடிக் கண்டுபிடித்து இராமாயணத்தையும் பாரதத்தையும் பற்றிய குறிப்புக்களை எழுதுகின்றார். குருதேவர் எழுதுகின்ற குறிப்புக்கள் சித்தர் ஏனைம்பட்டியாரும், குருதேவரின் தந்தையும் எழுதிவைத்துள்ள குறிப்புகளிலிருந்து எடுக்கப்பட்டவைதான்.

4) சீதை, தன்னை அரக்கி என்று அயோத்தி அரண்மனையில் கூறித் துன்புறுத்தியதால்; இராவணனைத் தந்தை என்று உணர்ந்த பின்னால்; இராமனை இலங்கைக்கு வரவழைத்துப் பட்டம் சூட்டி அயோத்தியுடன் போர்தொடுத்து அனைவரையும் அழிக்கவே நினைக்கின்றாள்.

5) விசுவாமித்திரரின் அத்திறம் மிகவும் சத்திவாய்ந்தது. அவர்தான் இராமனுக்கு எல்லா அத்திறங்களையும் கற்றுத் தருகின்றார். வீடணன் அத்திறங்களை ஒச்சுவதிலும், வியூகங்களை அமைப்பதிலும் மிகச்சிறந்தவன். போர் வியூகங்களைப் போல, அத்திறங்களை எப்படி மாற்றி மாற்றி உபயோகிப்பது என்பதை நன்கு அறிந்தவன், இதன் மூலம்தான் இராவணன் மூவுலகையும் வெல்கின்றான். இராவணனின் வில்லும், இராமனின் வில்லும் சிவனுடையதே! எனவே அந்த வில்லை முறிக்குமாறு வீடணன் அத்திற வியூகத்தைக் கூறியதும், இராமன் இராவணனின் சிவதனுசுவை முதல்நாள் போரில் ஒடித்து விடுகின்றான்.

6) இராவணன் தன் மருமகனைப் போரிட்டு அழைத்து வருவதாகத்தான் சீதையிடம் கூறிச் செல்கின்றான். அதனால்தான் கடைசிவரையிலும் போரை எதிரியை அழிக்கும் போராக நடத்த வில்லை.

7) இராவணன் கடைசிவரையிலும் வண்டமர் குழலியை சீதையைப் பார்க்கக் கூட அனுமதிக்கவில்லை. இராவணன் இறந்தவுடன் சீதை, ''எந்தையே! ஏழிசை வல்லவரே! எண்டிசையும் வென்றவரே! என்னால்தான் மாண்டீரோ!'' என்று கோட்டையை விட்டு, ஓடி வந்து கதறுகிறாள். அப்போது யாரோ ஒரு பெண் தன் கணவனுக்காக அழுது கொண்டு செல்வதைப் பார்த்த வண்டமர் குழலி 'அவள்தான் தனது மகள்' என உணர்ந்து சீதையைக் கட்டிப் பிடித்து அழுகின்றாள்.

''ஐயோ! மகளே! நீ இருப்பது தெரிந்திருந்தால் உன்னைக் கடலில் கொண்டு வைத்து விட்டு இப்போரை வெற்றியாக்கியிருப்பேனே''-என்று கதறுகின்றாள்.

8) சித்தர் இராமாயணம் கூறுகின்றது :-

சனகன் மகள் சீதை இந்திராணியைப் போன்ற அழகுடையவள் என்பதை விட: இராவணன் மனைவி வண்டமர் குழலியைப் போல அழகுடையவள் என்பதுதான் சாலச் சிறந்தது. ஏனெனில், இந்திராணியை விட அழகு மிக்கவள் வண்டமர்குழலி என்று மக்கள் பேசிக் கொள்கின்றார்கள்''

9) சுயம்வர மண்டபத்தில் இராவணன் சீதையைப் பார்த்து மனதில் நினைக்கின்றான். :-

''ஆயிரம் கோடி இந்திராணிகளின் அழகு என்மனைவி வண்டமர் குழலிக்கு ஈடாகாது என்று இறுமாந்திருந்தேன். ஆனால், என் மகள் சீதையின் பேரழகோ என்மனைவி வண்டமர் குழலியின் அழகுபோல் பல்லாயிரம் கோடி மடங்கு சிறப்புடையதாக இருக்கின்றது. அந்தோ! இப்பேரழகு மிக்க மகளை என்மார்பிலும், தோளிலும் தூக்கி வளர்க்க முடியாமல் போய் விட்டதே! இவளின் மழலை மொழியைக் கேட்க முடியாமல் போய்விட்டதே! இவளின் தளிர்நடையைப் பார்க்க முடியாமல் போய்விட்டதே!....''

10) சீதை தன் மகன்களாகிய இலவகுசர்களிடம் கூறுகின்றாள்:- ''அயோத்தி அரண் மனையில் உள்ளவர்கள் அரக்கி, அரக்கி என்று கூறி என்னை அரக்க மனம் படைத்தவளாக்கி விட்டார்களடா, மகன்களே! அவர்கள் பால் எனக்கு இரக்க மனம் வந்து விடக் கூடாது. எனவே, அவர்களைத் தனித்தனியாகக் கொன்று விடு! அவர்களை அச்சத்தால் துடி துடிக்கச் செய்து தனித்தனியாகக் கொன்று சாகடிக்க வேண்டும்.''

[அரக்க மனம் = உறுதியான மனம் = இளகாத மனம்]

மனித மனம் = இளகிய மனம்

11) குருதேவரின் தந்தை, ''இராவணனைக் காட்டிக் கொடுக்கும் வீடணனும், இயேசு வைக் காட்டிக் கொடுத்த யூதாசும் ஒன்றே'' என்றே கூறுவாராம்.

12) வீடணனுக்குச் சிறுவயது முதலே இராவணனின் சிம்மாசனத்தில் அமரவேண்டும் என்ற பேராவலால். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டான்.

13) இராமன் அனுப்பிய ஒற்றன் அனுமான். இராமன் அனுப்பிய தூதுவன் அங்கதன். அனுமானைத் தூதனுப்பிச் சீதை அங்கிருக்கின்றாளா? என்று அயோத்தி இளவரசன் கேட்பதை விடுத்துத் திருட்டுத்தனமாக ஒற்று அறிய அனுமானை அனுப்புகின்றான். அதனால்தான் இராவணன் கோபமடைகின்றான்.

14) ''இராமன் அனுப்பிய ஒற்றன் அனுமான் இலங்கை வந்தபோதே வீடணன் அவனோடு ஒப்பந்தம் செய்து கொள்கின்றான். அப்போதே வீடணன் இராமன் பக்கம் போய் விட்டான். இப்போது போனது கண்துடைப்பே'' என்று வண்டமர் குழலியின் தந்தையான விசுவகர்மாவிடம் கூறுகின்றான் இராவணன்.

15) இராவணன் அனுமானை 'ஒற்றன்' என்று கூறுவான். வீடணனோ 'தூதுவன்' என்று வாதிடுவான் 'தூதுவன் என்றால் என்னை நேரடியாக அல்லவோ வந்து சந்திக்க வேண்டும், திருட்டுத்தனமாக ஏன் சீதையை இலங்கையில் தேடவேண்டும். அதிலும் இராமன் ஒரு சூரிய குல அரசன். எனவே, அரசநீதியின்படி ஒற்றனைக் கொல்லுதல் வேண்டும். அதனால், அனு மானைத் தீயிட்டு அனுப்புகின்றேன்'' என்றான் இராவணன்.

16) கும்பகர்ணனுக்குத் திருமணம் ஆகாததால் முதலில் அனுமன் தன்னைச் சந்தித்த போதே வீடணன், இராவணனின் இரண்டு மகன்களையும் கொன்று விட்டால் தான் நேரடியாகப் பட்டத்துக்கு வரமுடியும் என்று கூறுகின்றான். அதன்படி சிறிய பாலகனாக இருந்த அச்சயக் குமாரனை எளிதாகக் கொன்ற அனுமான், மேகநாதனைக் கொல்ல முயல்கையில் அவன் மாயத் தால் எளிதாக மேலே சென்று விடுகின்றான்.

17) இராவணன் கும்பகர்ணனிடம், ''உன் தம்பி வீடணன், அனுமானிடம் ஏற்கனவே செய்த ஒப்பந்தத்தினால்தான் நான் திட்டியதும் அதைச்சந்தர்ப்பமாகக் கருதிச் சென்றுவிட்டான். என் இருமகன்களைக் கொல்லச் சொல்லியவன் உன் தம்பி வீடணன்'' என்று மனந்திறந்து தன் ஆற்றாமையைக் கூறுகின்றான். மேலும், அப்படிப்பட்ட வீடணனைக் கொல்ல மறுக்கிறாயே கும்பகர்ணா !'' என்கிறான், ஆனால், கும்பகர்ணன் வீடணனைக் கொல்லாததால்தான் போரின் முடிவு மாறுகின்றது.

18) அனுமான் கொன்ற அச்சயக்குமாரனின் மரணச் செய்தி கேட்டு இராவணன் மிகுந்த வருத்தமடையவில்லை. மாறாகச் சீதையின் வரவால் முன்பில்லாத மகிழ்ச்சியை அடைகின்றான். இராமணன் மேகநாதனிடம், ''உனது சகோதரி வந்துள்ளாள்'' என்று கூறினான். மேகநாதன் புரியாமல் தன் தாயைக் கேட்கின்றான். வண்டமர் குழலிக்கும் புரியவில்லை.

19) காட்டில் தவ வாழ்க்கை வாழ்ந்த போது ஒரு முறை கூட இராமன் இலக்குவனைப் பார்த்து ''உண்டாயா ? உண்ணுகின்றாயா?'' என்று கேட்கவில்லை. ஒரே ஒருமுறை காட்டில் ஒரு கனியைக் காட்டி 'இது நன்றாக இருக்கின்றதா பார்!' என்று மட்டும் இராமன் இலக்குவனிடம் தந்தான். இதனால் மனமுடைந்த இலக்குவன், நல்லாயில்லாத அந்தக் கனியைக் கூடத் தின்று பார் என்று கூறவில்லையே' என வருந்தித் தன் தொடையைக் கீறி அதனுள் அக் கனியை வைத்து மூடிக்கொள்கிறான். பட்டாபிடேகம் முடிந்ததும் இராமன் கேட்கின்றானாம், 'இலக்குவனா ! சாப்பிட்டாயா ?' என்று. அப்போது இலக்குவன் சொல்கின்றான், 'நான் சாப்பிட்டு 14 ஆண்டுகள் ஆகின்றன. இராமா! ஒருமுறை கூட என்னைச் சாப்பிடுகின்றாயா ? என்று கேட்கவில்லையே !'. இதைக் கேட்ட இலக்குவனின் தாய் பதறி இராமனிடம், 'எனது வயிற்றெரிச்சல் உன்னை அழிக்கட்டும்' என்கின்றாள். அந்தத் தீ இராமனைச் சேருகின்றது.

20) தவ வாழ்க்கையில் யாரையும் கொல்லக்கூடாது. எனவேதான் இலக்குவன் இராமனுக்குத் துணையாகச் சென்று வேட்டையாடி நன்கு சமைத்து உணவு தருகின்றான். தவ வாழ்க்கையில் ஆயுதம் எடுக்கக் கூடாது இருந்தாலும் சண்டைக்குப் போகின்றான் இராமன் இராவணனிடம்.

## விசுவாமித்திரரின் வெற்றி

விசுவாமித்திரர் நன்கு திட்டமிட்டே அரக்கர்குல மகளான சீதையைச் சூரிய குல இளவலான இராமனுக்கு மணமுடித்து வைக்கின்றார். அதற்குக் காரணம் 'வசிட்டரைத் தானாகவே அரச குரு பதவியைத் துறந்துவிட்டு ஓடச் செய்வேன்' என்று சபதமிட்டிருந்தார் விசுவாமித்திரர். 'அது ஒருநாளும் நடக்காது' என்றார் வசிட்டர்.

திருமணம் முடிந்து வெகுகாலம் கழித்துத்தான் 'அரக்கர் குல இராவணன் மகள் சீதை' என்பதை வசிட்டர் உணருகின்றார். எனவேதான் வசிட்டர் இராமன் காட்டுக்குப் போவதை அனுமதிக்கின்றார். அப்போது விசுவாமித்திரர் தனது நெருக்கமான குருகுல மாணாக்கர்களிடம் 'தாய்ப்பசு கன்றைத்தேடி ஓடிவருவது போல இந்தச் சீதையை மிகவிரைவில் இராவணன் அடையாளம் தெரிந்து எடுத்துச் சென்று விடுவான். தன் மகளுக்காக இராவணன் எதையும் செய்வான். அப்போது என்னுடைய வில்வித்தையால் இராமன் இராவணனைக் கொல்லுவான் அதேபோல் சீதையின் வயிற்றில் பிறக்கக் கூடிய இராவணனின் பேரர்கள் இராமனை என்னுடைய வில்வித்தையினால் கொல்லுவார்கள். ஒரே கல்லில் இரண்டு மாங்காய். இந்த விசுவாமித்திரரின் வித்தையைத் தெரியாத சொத்தைகள் இவர்கள், இந்த வசிட்டன் தன்னைத் 'தேவகுரு' என்றும் என்னை அசுரகுரு என்றும் சொன்னான். இந்த அசுரகுரு வித்தையினால்

அசுரர்களும் அழியப் போகின்றார்கள், தேவர்களும் அழியப்போகின்றார்கள். இந்தவேடிக்கையை இந்த வசிட்டன் பார்க்கத்தான் போகின்றான். இந்த வசிட்டனால்தேவர்களின் அழிவையும்தடுக்க முடியாது, அசுரர்களின் அழிவையும் தடுக்கமுடியாது.

''இந்த வசிட்டன் தன்னைத் தேவகுரு என்று பெருமையடித்துக் கொள்கிறான். இவன் நாளைக்குச் சூரிய குலத்து மருமகளான அரக்கர் குலக் குமாரியான சீதையின் வயிற்றில் பிறக்கப் போகும் குழந்தைகள் சூரியகுல மன்னர்களாக முடிசூட்டி ஆளும்போது இந்தத் தேவகுருவான வசிட்டன் எப்படி அந்த அரக்கர் குலத்திற்கு அரசகுருவாக இருக்க முடியும்? இந்த விசுவாமித்திரன் அரிச்சந்திரனைப் பயன்படுத்தியதால்தான் தோற்றான். ஆனால், அயோத்தி மன்னர்களையும், இலங்கை வேந்தனையும் பயன்படுத்துவதில் தோற்கமாட்டான். நான் விளையாடப்போகும் அரசியல் சதுரங்க விளையாட்டில் இருவர் ஆட்டத்தையும் நானே விளையாடப் போகின்றேன். சூரியகுலத்துக்கும் நானே வித்தை கற்றுக் கொடுத்தேன்; இனிமேல், நானே அரக்கர் குலத்திற்கும் கற்றுக் கொடுப்பேன். இந்த அயோத்திய அரசகுடும்பத்தினர் அனைவரையுமே தனித் தனியாகப் பதறப் பதறக் கதறக் கதறக் கொலைபட்டுச் சாகச் செய்வேன். அப்போது இந்த வசிட்டன் அரசகுருவாக இருந்து எதைச்செய்யப் போகின்றான்?! யாரைக் காப்பாற்றப் போகின்றான்?! இந்த யுகத்தின் முனிவனாக, இருடியாக என்பேரை நிலைநாட்டுகின்றேனா? இல்லையா? என்பதைப் பார்!'' என்றார்.

(8-4-1988 வெள்ளியன்று இக்கருத்தினை குருதேவர் அவர்கள் வெளியிட்டார்).

*ஆராய்ச்சிக்கு :* உண்மையிலேயே விசுவாமித்திரர் வெற்றி பெற்றாரா?; இல்லை, என்றுதான் கூற வேண்டும். ஏனெனில், அவருடைய செயல்கள்தான் வென்றனவே தவிர வெற்றிக்குரிய புகழ் நிலைக்கவில்லை.

விசும்பு + அத்திறர் -> விசும்பாத்திறர் -> விசும்பத்திறர்

விசும்பத்திறர் என்று கடந்த யுகம் வரையிலும் பதினெண் சித்தர் பீடாதிபதிகளும் குறிக்கின்றார்கள். விசும்புவரை அத்திறம் ஓச்சுவார் இவர். அதாவது பூமிக்கு மேலே ஐந்தாவது நிலையான விசும்பு வரை இவருடைய அத்திறம் செல்லும். அதற்கு அடுத்த பாழ்வெளி, பரவெளிகளுக்கு இவரது அத்திறம் செல்லாது. அதற்கான முயற்சிகளில் ஈடுபடாமல் விசும்பத்திறர் மண்ணுலக வாழ்க்கைக்கு வந்து விடுகின்றார். பதினெண்சித்தர் பீடாதிபதிகள் மட்டும் தான் மேலே உள்ள ஏழு உலகையும் கடந்து அத்திறங்களைச் செலுத்துவர். அதனால்தான், இவர்களை 'ஆச்சாறியார்' என்றும் மற்றவர்களை 'ஆச்சாரியார்' என்றும் அழைப்பர்.

விசும்பாத்திறர் வரலாறு தமிழர் வரலாறு என்பதால் அதை மறைக்க எண்ணியே இந்தப் பிறமண்ணினரான பிருமணர்கள் ; **விசுவாமித்திரர் சூத்திரைக்குப் பிறந்தவர்** என்று ஆபாசமாகவும் அநாகரீகமாகவும் இழிவாகக் குறித்து விட்டனர். **விசும்பாத்திறர்** என்ற தமிழ்ச் சொல் மறைக்கப்பட்டதால்; தமிழன், அதற்குரிய பொருளை ஆராயவோ, அதற்குரிய வரலாற்றை ஆராயவோ விரும்பவில்லை. விசுவாமித்திரர் என்ற ஆபாசப் பொருள் பொதிந்த வார்த்தையினால் எவ்வளவு பெரிய இழப்பு! இவ்வாறுதான், சமசுக்கிருதம் தமிழை அழித்தது, அழித்துக் கொண்டிருக்கிறது.

(முற்றும்)

# "குரு வழிபாட்டுப் பூசைமொழி வாசகம்"
## (அல்லது)
# "ஞான உலாக் கைகொட்டி முழக்கம்"

அடியான், அடியாள், அடியார், ஆர்வலர், நம்பிக்கையாளர், ஏந்தாளர் என அறுசமயத் தாரும் குருதேவரின் ஞான உலாவில் கைகொட்டி முழக்கியபடி அரணுக வரற்குரிய முழக்க வாசகம்.

1. ''அர அற சிவா! செய செய சிவா !
2. அர அற பரமா! செய செய பரமா !
3. அர அற ஈசா! செய செய ஈசா !
4. அர அற சங்கரா! செய செய சங்கரா !
5. அர அற நடராசா! செய செய நடராசா !
6. அர அற கூத்தா! செய செய கூத்தா !
7. அர அற அவிர்சடையோனே! செய செய அவிர்சடையோனே !
8. அர அற ஆலமர்கடவுளே! செய செய ஆலமர்கடவுளே !
9. அர அற முக்கண்ணனே! செய செய முக்கண்ணனே !
10. அர அற பிறையோனே! செய செய பிறையோனே !
11. அர அற கங்கையாளனே ! செய செய கங்கையாளனே !
    [கங்காளனே ! பாட வேறுபாடு]
12. அர அற உமையாளனே ! செய செய உமையாளனே !
13. அர அற மாதொருபாகனே ! செய செய மாதொருபாகனே !
14. அர அற விடையேறுபாகனே ! செய செய விடையேறுபாகனே !
15. அர அற திருநீலகண்டனே ! செய செய திருநீலகண்டனே !
16. அர அற கன்னியப்பனே ! செய செய கன்னியப்பனே !
17. அர அற அம்கயற்கன்னியனே ! செய செய அம்கயற்கன்னியனே !
18. அர அற அம்கயற்கண்ணியனே ! செய செய அம்கயற்கண்ணியனே !
19. அர அற தாயுமானவனே ! செய செய தாயுமானவனே !
20. அர அற திரிபுரமெரித்தவனே ! செய செய திரிபுரமெரித்தவனே !
21. அர அற வெய்யதழற்கையோனே ! செய செய வெய்யதழற்கையோனே !
22. அர அற மழுக்கையோனே ! செய செய மழுக்கையோனே !
23. அர அற அருட்கையோனே ! செய செய அருட்கையோனே !
24. அர அற ஈசுவரனே ! செய செய ஈசுவரனே !
25. அர அற பரமேசுவரனே ! செய செய பரமேசுவரனே !
26. அர அற சர்வேசுவரனே ! செய செய சர்வேசுவரனே !
27. அர அற மகேசுவரனே ! செய செய மகேசுவரனே !
28. அர அற அனுதி ஈசுவரனே ! செய செய அனுதி ஈசுவரனே !
29. அர அற ஓம ஈசுவரனே ! செய செய ஓம ஈசுவரனே !
30. அர அற ஓக ஈசுவரனே ! செய செய ஓக ஈசுவரனே !
31. அர அற யாக ஈசுவரனே ! செய செய யாக ஈசுவரனே !
32. அர அற யக்ஞ ஈசுவரனே ! செய செய யக்ஞ ஈசுவரனே !
33. அர அற வேள்வி ஈசுவரனே ! செய செய வேள்வி ஈசுவரனே !
34. அர அற தவ ஈசுவரனே ! செய செய தவ ஈசுவரனே !

35. அர அற ஞான ஈசுவரனே ! செய செய ஞான ஈசுவரனே !
36. அர அற மோன ஈசுவரனே ! செய செய மோன ஈசுவரனே !
37. அர அற மோக ஈசுவரனே ! செய செய மோக ஈசுவரனே !
38. அர அற போக ஈசுவரனே ! செய செய போக ஈசுவரனே !
39. அர அற யோக ஈசுவரனே ! செய செய யோக ஈசுவரனே !
40. அர அற ஏக ஈசுவரனே ! செய செய ஏக ஈசுவரனே !
41. அர அற அநேக ஈசுவரனே ! செய செய அநேக ஈசுவரனே !
42. அர அற மறை ஈசுவரனே ! செய செய மறை ஈசுவரனே !
43. அர அற நான்மறை ஈசுவரனே ! செய செய நான்மறை ஈசுவரனே !
44. அர அற முறை ஈசுவரனே ! செய செய முறை ஈசுவரனே !
45. அர அற நான்முறை ஈசுவரனே ! செய செய நான்முறை ஈசுவரனே !
46. அர அற நெறி ஈசுவரனே ! செய செய நெறி ஈசுவரனே !
47. அர அற நானெறி ஈசுவரனே ! செய செய நானெறி ஈசுவரனே !
48. அரஅற வேத ஈசுவரனே ! செய செய வேத ஈசுவரனே !
49. அரஅற நான்வேத ஈசுவரனே ! செய செய நான்வேத ஈசுவரனே !
50. அரஅற மறையாந்த ஈசுவரனே ! செயசெய மறையாந்த ஈசுவரனே !
51. அரஅற நான்மறையாந்த ஈசுவரனே ! செயசெய நான்மறையாந்த ஈசுவரனே !
52. அரஅற முறையாந்த ஈசுவரனே ! செயசெய முறையாந்த ஈசுவரனே !
53. அரஅற நான்முறையாந்த ஈசுவரனே ! செயசெய நான்முறையாந்த ஈசுவரனே !
54. அரஅற நெறியாந்த ஈசுவரனே ! செயசெய நெறியாந்த ஈசுவரனே !
55. அரஅற நானெறியாந்த ஈசுவரனே ! செயசெய நானெறியாந்த ஈசுவரனே !
56. அரஅற வேதாந்த ஈசுவரனே ! செயசெய வேதாந்த ஈசுவரனே !
57. அர அற நான்வேதாந்த ஈசுவரனே ! செய செய நான்வேதாந்த ஈசுவரனே !
58. அர அற நாத ஈசுவரனே ! செய செய நாத ஈசுவரனே !
59. அர அற நாதாந்த ஈசுவரனே ! செய செய நாதாந்த ஈசுவரனே !
60. அர அற நவநாத ஈசுவரனே ! செய செய நவநாத ஈசுவரனே !
61. அர அற நவநாதாந்த ஈசுவரனே ! செய செய நவநாதாந்த ஈசுவரனே !
62. அர அற கோடி ஈசுவரனே ! செய செய கோடி ஈசுவரனே !
63. அர அற நவகோடி ஈசுவரனே ! செய செய நவகோடி ஈசுவரனே !
64. அர அற விந்து ஈசுவரனே ! செய செய விந்து ஈசுவரனே !
65. அர அற விந்தாந்த ஈசுவரனே ! செய செய விந்தாந்த ஈசுவரனே !
66. அர அற நூற்றைம்பதாயிரம் விந்து ஈசுவரனே ! செய செய நூற்றைம்பதாயிரம் விந்து ஈசுவரனே !
67. அர அற நூற்றைம்பதாயிரம் விந்தாந்த ஈசுவரனே ! செய செய நூற்றைம்பதாயிரம் விந்தாந்த ஈசுவரனே !
68. அர அற ஓத ஈசுவரனே ! செய செய ஓத ஈசுவரனே !
69. அர அற ஓதாந்த ஈசுவரனே ! செய செய ஓதாந்த ஈசுவரனே !
70. அர அற முப்பத்தாறு ஓத ஈசுவரனே ! செய செய முப்பத்தாறு ஓத ஈசுவரனே !
71. அர அற முப்பத்தாறு ஓதாந்த ஈசுவரனே ! செய செய முப்பத்தாறு ஓதாந்த ஈசுவரனே !
72. அர அற போத ஈசுவரனே ! செய செய போத ஈசுவரனே !

73. அர அற போதாந்த ஈசுவரனே ! செய செய போதாந்த ஈசுவரனே !
74. அர அற தொண்ணூற்ருறு போத ஈசுவரனே !
செய செய தொண்ணூற்ருறு போத ஈசுவரனே !
75. அர அற தொண்ணூற்ருறு போதாந்த ஈசுவரனே !
செய செய தொண்ணூற்ருறு போதாந்த ஈசுவரனே !
76. அர அற சுருதி ஈசுவரனே ! செய செய சுருதி ஈசுவரனே !
77. அர அற சுருதியாந்த ஈசுவரனே ! செய செய சுருதியாந்த ஈசுவரனே !
78. அர அற ஆரண ஈசுவரனே ! செய செய ஆரண ஈசுவரனே !
79. அர அற ஆரணாந்த ஈசுவரனே ! செய செய ஆரணாந்த ஈசுவரனே !
80 அர அற ஆகம ஈசுவரனே ! செய செய ஆகம ஈசுவரனே !
81. அர அற ஆகமாந்த ஈசுவரனே ! செய செய ஆகமாந்த ஈசுவரனே !
82. அர அற மீமாம்சை ஈசுவரனே ! செய செய மீமாம்சை ஈசுவரனே !
83. அர அற மீமாம்சையாந்த ஈசுவரனே !
செய செய மீமாம்சையாந்த ஈசுவரனே !
84. அர அற நேம ஈசுவரனே ! செய செய நேம ஈசுவரனே !
85. அர அற நேமாந்த ஈசுவரனே ! செய செய நேமாந்த ஈசுவரனே !
86. அர அற நியம ஈசுவரனே ! செய செய நியம ஈசுவரனே !
87. அர அற நியமாந்த ஈசுவரனே ! செய செய நியமாந்த ஈசுவரனே !
88. அர அற நிடத ஈசுவரனே ! செய செய நிடத ஈசுவரனே !
89. அர அற நிடதாந்த ஈசுவரனே ! செய செய நிடதாந்த ஈசுவரனே!
90. அர அற நிட்டை ஈசுவரனே ! செய செய நிட்டை ஈசுவரனே !
91. அர அற நிட்டையாந்த ஈசுவரனே!
செய செய நிட்டையாந்த ஈசுவரனே !
92. அர அற மந்தர ஈசுவரனே ! செய செய மந்தர ஈசுவரனே !
93. அர அற மந்திர ஈசுவரனே ! செய செய மந்திர ஈசுவரனே !
94. அர அற மந்திற ஈசுவரனே ! செய செய மந்திற ஈசுவரனே !
95. அர அற மாந்தர ஈசுவரனே ! செய செய மாந்தர ஈசுவரனே !
96. அர அற மாந்தரீக ஈசுவரனே ! செய செய மாந்தரீக ஈசுவரனே !
97. அர அற தந்தர ஈசுவரனே ! செய செய தந்தர ஈசுவரனே !
98. அர அற தந்திர ஈசுவரனே ! செய செய தந்திர ஈகவரனே !
99. அர அற தந்திற ஈசுவரனே ! செய செய தந்திற ஈசுவரனே !
100. அர அற தாந்தர ஈசுவரனே ! செய செய தாந்தர ஈசுவரனே !
101. அர அற தாந்தரீக ஈசுவரனே ! செய செய தாந்தரீக ஈசுவரனே !
102. அர அற எந்தர ஈசுவரனே ! செய செய எந்தர ஈசுவரனே !
103. அர அற எந்திர ஈசுவரனே ! செய செய எந்திர ஈசுவரனே !
104. அர அற எந்திற ஈசுவரனே ! செய செய எந்திற ஈசுவரனே !
105. அர அற ஏந்தர ஈசுவரனே ! செய செய ஏந்தர ஈசுவரனே !
106. அர அற ஏந்தரீக ஈசுவரனே ! செய செய ஏந்தரீக ஈசுவரனே !
107. அர அற ஆயிரத்தெட்டுக் கருவறை ஈசுவரனே !
செய செய ஆயிரத்தெட்டுக் கருவறை ஈசுவரனே !
108. அர அற குருவான ஈசுவரனே ! செய செய குருவான ஈசுவரனே !

குறிப்பு :

அர = அரண் — கோட்டை

> கோட்டை போல் அனைத்தையும் காப்பாற்றும் திருமால் (அரி)

அற = அறம் = நீதி

> ஆக்கல், காத்தல், அழித்தல், அருளல், இரங்கல் எனும் ஐந்தொழில் வல்ல பரம்பொருளான சிவபெருமான்

ஈசுவரன் : ஈ = இரக்கம், கொடை

ஈசுவரன் -> இரக்கத்தால் கொடுக்கின்றவன்; யார் என்ன வரம் கேட்டாலும் யோசிக்காமல் கொடுக்கக் கூடிய ஒரே கடவுள் சிவனுன ஈசுவரன்

ஈசன் -> ஈகையில் சிறந்தவன், ஈகையில் மிக்கோன்.

இந்த நூற்றெட்டு வாசகங்களை (i) 'மூலாச்சாரியார்கள்' (ii) 'கருவழி யாச்சாரியார்கள் கள்' (iii) 'குருவழியாச்சாரியார்கள்' (iv) 'பதினெண் சித்தர் பீடாதிபதி வழி ஆச்சாரியார்கள் (v) பதினெண்சித்தர் பீடாதிபதிகள்' எனும் **ஐந்து வகை ஞானத் தலைவர்கள்** தங்களுடைய அருட்பணிக்காக '**ஞான உலா**' வரும் போது அடியான்கள், அடியாள்கள், அடியார்கள், ஆர்வலர்கள், நம்பிக்கையாளர்கள், ஏந்தாளர்கள் எனும் ஆறுவகையினரும் கையைக் கொட்டிக் கொண்டு (கை தட்டியபடி) மேலே குறிப்பிட்ட நூற்றெட்டு (108) முழக்க வாசகங்களையும் ஒன்றன் பின் ஒன்ருக முறையாகக் கூறிச்செல்வதே அருளுலக விழிச்சியை! எழிச்சியை! வளவளர்ச்சியை! மறுமலர்ச்சியை! செழிச்சியை!.... விளைவிக்கும்! விளைவிக்கும்! விளைவிக்கும்!....'' என்று குருபாரம்பரியம் கூறுகிறது.

இதுதான், பதினெண் சித்தர்கள் படைத்த மெய்யான இந்து மதத்தின் பூசைமொழி வாசகங்களில் அனைத்துக்கும் ஈசனுக உள்ள குருவழிபாட்டுப் **பூசைமொழிவாசகம்** என்று குருபாரம்பரியத்திலும், குருவாக்கு, குருவாக்கியம், குருவாசகம்.... என்ப்படும் பதினெட்டு வகையான பூசாவிதி நூல்களிலும் குறிக்கப்படுகின்றது.

# 'குருபாரம்பரிய வாசகங்கள்'

1) ''தனிமனிதர்கள் அருள்நீர் நிறைந்த கார்மேகங்களாகி அருள்மழை பொழிதல் வேண்டும். அப்பொழுதுதான் அருள்நீர் எங்கும் ஊற்றெடுத்து, தாகங்களையும் பசிகளையும் தணிக்க வழிவகை செய்யும்''

2) ....மானுடர்களில் தேவர்கள், தேவகுமாரர்கள், ....பிறப்பெடுத்துத் தொண்டாற்றுவது பதினெண் சித்தர்களின் அருட்பணித்திட்டமே. பதினெண் சித்தர்களின் நேரடி விந்துவழி வாரிசுகளால்தான் 'அறிவுரை', 'அருளுரை' 'அறிவார்ந்த அருளுரை, 'அருளார்ந்த அறிவுரை' வழங்க முடியும்! முடியும்!! முடியும்!!! ....இவற்றின் பயனுகத்தான் இந்திய மண்ணில் அருளாளர்கள் வாழையடி வாழையாகத் தோன்றிச் செயல்பட்டுக் கொண்டே இருக்கிருர்கள். தமிழினம் அருளாளர்களின் தாய்; தமிழ்மொழி அருளாளர்களின் விழி, உயிர், செயல், சிந்தனை....'; தமிழகம் ஒருகடவுளர் நாடு.... எனவேதான், தமிழர்களில் நாயன்மார்களும் ஆழ்வார்களும், மௌனிகளும், ஞானிகளும், தவசிகளும், மறையோர்களும் முறையோர்களும், நெறியோர்களும், வேதியர்களும் நாதமுனிகளும், இருடிகளும், சித்தியார்களும்.... தோன்றிக கொண்டே இருந்தும் கூட மக்களிடையில் புதிய அருளாசையை, அளப்பரிய அருளார்வத்தை உருவாக்கவே முடியவில்லை. எந்த அற்புதமும், வியப்பும், மாயமும், மந்திர தந்திர எந்திரச் செயலும்.... தமிழர்க்கு வியப்பாக இருப்பதில்லை. இப்படிப்பட்ட தமிழர்களை ஒன்று திரட்டி ஒற்றுமைப் படுத்திஞல்தான் 'உலக அருளாட்சி' அமைக்க முடியும்! முடியும்!! முடியும்!!!

3) ''....உலகில் தமிழகத்தைத் தவிர அருளாளர்கள் தோன்றுவது அரிது. அதிலும் இந்தியாவைக் கடந்து தோன்றிட்ட அருளாளர்கள் மிகச் சிலரே. அதனால்தான், மகப்பேறு இல்லாப் பல குடும்பங்களுக்கிடையில் பிறந்த ஒரு மகவு சீராட்டிப் பாராட்டி வளர்க்கப்படுவது போல் கன்பியூசியசும், சொராசிட்டரும், ஈசாவும் (இயேசு)' முகம்மது நபியும்.... அவர்களது காலத்திலேயே விரிந்த செல்வாக்கைப் பெற்றனர்' அவ்வருளாளர்களுக்குப் பிறகு விரைந்த வளர்ச்சி உருவாகி, உலகம் முழுதும் பரவிற்று. ஆனால், தமிழகத்தில் மானுட இனம் பிறந்த குமரிக் கண்டத்துக்கு அருள்மழையாக விண்வெளி அண்டங்களிலிருந்து பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புகளும் வந்து தங்கி அமிழ்தான தமிழில் அருளை வழங்கினர். அன்று முதல் என்றென்றும் பத்தியாளர்கள், முத்தியாளர்கள் காடு போல் தமிழினத்தில் தழைத்து வருகின்றனர், அதனால் தமிழர்கள் அருளாளர்களைப் போற்றிப் பேணிப் பயன்பத்தித் தாங்களும உய்வடைந்து பிறரையும் உய்வடையச் செய்யும் பணியைச் சிறப்பாகச் செய்யாமல் உறங்கும் உணர்வைப் பெற்று விட்டார்கள். எனவேதான, நாற்பத்தெட்டு வகைச் சித்தர்களும், பதின் மூன்று வகை அருளாளர்களும்.... தொடர்ந்து பழமையான வழிபாட்டு நிலையங்களைப் போற்றிப் பாதுகாப்பதோடு புதிய புதிய வழிபாட்டு நிலையங்களைத் தோற்றுவித்துக் கொண்டே வருகிறார் கள். இருந்தும் தமிழர்களின் அருளுலக வாழ்வு அடிக்கடி இருள் நிறைந்ததாகி வருகின்றது. இதனைத் தடுத்துத் தமிழர்களின் அருளுலக வாழ்வு ஒளிமிக்கதாக இருக்கச் செய்யவே 'குருபாரம் பரியம்', 'குருவாக்கு', 'குருவாசகம்', 'திருவாக்கு,' 'திருவாசகம்', 'கருவாக்கு', கருவாசகம் 'அருள்வாக்கு', 'அருள்வாசகம்', 'மருள்வாக்கு', 'மருள்வாசகம்', 'எள்ளல் மாலை, 'ஏசல் மாலை', 'வணக்க மாலை', 'கும்பிடுமாலை', வழிபாட்டு மாலை' 'தொழுகைமாலை', 'அழுகை மாலை', 'அரற்றல் மாலை,' 'புலம்பல் மாலை', 'கோள்மாலை' [ஞாயிறுமாலை, திங்கள் மாலை, செவ் வாய்மாலை, புதன்மாலை, வியாழன் மாலை, வெள்ளி மாலை சனிமாலை இராகுமாலை, கேதுமாலை] 'சூத்திரம், சூத்திறம், சூத்தரம்', சாத்திரம், சாத்திறம், சாத்தரம்', தோத்திரம், தோத்திறம், தோத்தரம்', 'மந்திரம்' மந்திறம், மந்தரம்', எந்திரம், எந்திறம், எந்தரம்', ['ஏந்தரம், என்று பாடவேறுபாடு ஆய்வது தனிக்கலைஉண்டு] தந்திரம், தந்திறம், தந்தரம்,' 'மாந்தரம், மாந்தரிகம்', 'தாந்தரம், தாந்தரிகம்', 'ஏந்தரம், ஏந்தரிகம்', 'நிடதம், இணைநிடதம், துணை நிடதம்', 'நான்மறை, நான்முறை, நானெறி, நான்வேதம்', 'மறை, மறையாந்தம்', 'முறை முறையாந்தம்', 'நெறி, நெறியாந்தம்', 'வேதம்' வேதாந்தம்', 'போதம், போதாந்தம்', 'ஆகமம்', 'மீமாம்சை'.... முதலியவைகளை மானுட இனத்துக்குப் பதினெண் சித்தர்கள் தங்களது மொழியான அமிழ்தத் தமிழில் வழங்கினார்கள். இப்பேருண்மையினைந் தெரிய! அறிய! ஆராய! புரிய! தெளிய! உணர! நம்பத் தமிழர்களைப் பக்குவப்படுத்தவே பதினெண் சித்தர் பீடாதிபதிகள் தோன்றுகிறார்கள்....''

4) ''....பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் தமது இருநூறுஆண்டு முயற்சிகளினால் அயர்ச்சியால் நிலையான அருளுலகக் காப்புக்காகத் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டினார். இந்த வழிபாட்டு நிலையம் அருளுலகச் செழிப்பை வளர்க்க முடியாது போனால், தொடர்ந்து அருளுலகச் செழிப்பை விழிப் பாகக் காத்திட ஏட்டுலகில் நிலையான கோயில் ஒன்றையும் கட்டினார். இக்கோயில் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், சித்தர் அமராவதி ஆற்றங்கரைப் கருவூரார் தேடிச் சென்று கொணர்ந்து பதினெட்டாண்டுகள் வளர்த்த தேவகுமாரன் ஈசாவும், தேவதூதர் முகம்மது நபி அவர்களும் பன்னிரண்டு அடியான்களை உருவாக்கியதுபோல், இவர் பன்னிரண்டு நூல் தொகுதிகளைப் 'பன்னிரு திருமுறைகள்' என்று உருவாக்கிடும் பணியினைத் துவக்கினார் .... குரு பாரம்பரியத்தின் நிறைவு பன்னிரு திருமுறைப் பட்டியலாகின்றது.... இனிக் குருபாரம்பரியம் எழுதுவாரெவர்? தமிழினக் கருவான குருபாரம்பரியம் காப்பார் எவர் கடல் கடந்த நாடு வாழ்கன்னித் தமிழரே குருபாரம்பரியம் காத்தற்குரியார்....'' - கருவூர்த்தேவரின் குருபாரம்பரிய வாசகம். இதன்படி, கருவூர்த்தேவர் குருபாரம்பரியச் செப்பேடுகளையும், ஓலைச் சுவடிகளையும்கடல்கடந்த நாடுகளுக்குஅனுப்பினார் என்ற வரலாற்றுப்பேருண்மைபுலனாகின்றது.